**முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

**16.06.2026**

OS. No. 97/2010

பக்கம் – 6

PW1 – பால்ராஜ்

**1, 8, 9 மற்றும் 18 பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சசீலா முனுசாமி A அட்டவணை சொத்தில் உள்ளதை வழக்கில் தாக்கல் செய்துள்ளார். சுமார் எத்தனை ஆண்டுகள் அங்கு வசித்து வருகிறார்கள் என்றால் 2010 முதல் வசித்து வருகிறார்கள். எனது வழக்கில் 2000 வருடம் முதல் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும் தற்போது 2010 என்று சொல்வதால் எது சரியான வருடம் என்றால் 2000 ஆண்டுமுதல் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் 2010 ஆண்டு இந்த தாவா தாக்கல் செய்துள்ளேன். முதல் பிரதிவாதி வசிக்கும் வீட்டின் அளவு 16 x 11 சதுரடி ஆகும். 16 x 11 சதுரடி என்று எனது வழக்கில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. அந்த கட்டிடம் எவ்வாறு உள்ளது என்றால் 4 அடி உயரம் உள்ள ஒற்றை கல் வைத்த ஓட்டு கட்டிடம் ஆகும். மின் கட்டணம் வருகிறதா என்றால் வருகிறது. அது உயர்நீதிமன்ற உத்தரவு படி பெற்றுள்ளார். வரி ரசீது பிரதிவாதிகள் பெயரில் வருகிறதா என்றால் அது தெரியாது. ஆனால் என் பெயரில் வருகிறது. சுசீலா முனுசாமிக்கு அவர்கள் வசிக்கும் இடத்திற்கு எந்த ஆண்டிலிருந்து வரி ரசீது வருகிறது என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. தாவா வீட்டின் A அட்டவணை சர்வே எண்.1/1பி. முதல் பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையை நான் படிக்க பார்க்கவில்லை. 2000 வருடத்தில் பிரதிவாதி சுவாதீனத்தில் வந்ததாக நான் சொல்லும் நிலையில் அது குறித்து வழக்கறிஞர் அறிவிப்போ புகாரோ கொடுத்துள்ளேனா என்றால் குன்றத்தூர் காவல் நிலையத்தில் கொடுத்துள்ளேன். அந்த காவல் நீதிமன்றத்தில் கொடுத்த புகாரின் அத்தாட்சியை தாக்கல் செய்துள்ளேனா

என்றால் இல்லை. எனது பிராதில் 2000 வருடத்தில் பிரதிவாதிகள் வந்தது சம்பந்தமாகவும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது சம்பந்தமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தந்தை பெயர் கோவிந்தப்பிள்ளை. எனது தந்தை காலத்திலேயே சுசிலா முனுசாமி தாவா சொத்தில் 30 வருட காலமாக வசித்து வருகிறார் என்றால் இல்லை. சுசிலா முனுசாமி அவர்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் தான் வீடு கட்டியுள்ளார் என்றால் இல்லை. முதலில் பிரதிவாதி ஓலை குடிசை கட்டி அதன் பின்பு கட்டிடமாக கட்டியுள்ளார் என்றும் அதை எல்லாம் நாங்கள் எங்களுக்கு பாத்தியதை இல்லாததால் தான் வேடிக்கை பார்த்தோம் என்றால் சரியில்லை. சுசிலா முனுசாமி பெயரில் தான் வீட்டு வரி ரசீது மற்றும் மற்ற ஆவணங்கள் வருகிறது என்றால் சரியல்ல. சுசிலா முனுசாமி எனக்கு உறவினரா என்றால் இல்லை. 5ம் பிரதிவாதி சப்ருக் மண்டல் தாவாவிற்கு பின்பு இறந்தது தெரிய வந்தது என்றால் சரிதான். 5ம் பிரதிவாதிக்கு வாரிசு சேர்த்துள்ளோமா என்றால் 18 ம் பிரதிவாதியாக அவரது மகன் சேர்க்கப்பட்டுள்ளார்.

Sd/– J.மோகனா,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.